7.04.2022
அசல் வழக்கு எண்: 463/2012

வா.சா.1 சாட்சி ராஜகோபாலன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி 12,13 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று கேட்டால் பாக விஸ்தி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய தகப்பனார் பெயர் என்ன என்று கேட்டால் பால்சாமி தேவர். என் தகப்பனாரின் தகப்பனார் பெயர் என்ன என்று கேட்டால் பின்னத்தேவர் ஆகும். பின்னத்தேவரின் மனைவி பெயர் என்ன என்று கேட்டால் மூக்கம்மாள் ஆகும். என் தகப்பனார் உடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றுகேட்டால் 2 நபர்கள் அர்ஜுனன் மற்றும் வீமத்தேவர் ஆவார்கள். அர்ஜுனன் தேவர் எப்போது இறந்தார் என்று கேட்டால் சுமார் 40 வருடத்திற்கு முன்பு இறந்தார். வீமத்தேவர் எப்போது இறந்தார் என்று கேட்டால் அர்ஜுனத்தேவர் இறந்து சுமார் 20 வருடத்திற்கு பிறகு இறந்தார். அர்ஜுனன் மற்றும் வீமத்தேவர் இறந்ததை காண்பிக்க கூடிய இறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் தாக்கல் செய்யவில்லை. அர்ஜுனத்தேவருக்கு யார் யார் வாரிசுகள் என்றுகேட்டால் சிவனாண்டி, பால்துரை, அயோத்தி, கண்ணன், செல்லபாண்டியன் ஆகியோர்கள் வாரிசுகள். அர்ஜுனத்தேவருக்கு பெண் வாரிசுகள் உள்ளதா என்று கேட்டால் உள்ளது அவர் பெயர் சீதாலெட்சுமி ஆகும். சீதாலெட்சுமியை வழக்கில் சேர்த்துள்ளேனா என்று கேட்டால் சேர்க்கவில்லை. என் உடன் பிறந்தது எத்தனை நபர்கள் என்று கேட்டால் 4 நபர்கள் ஜோதிராஜன், அம்மாபொன்னு , பரமேஸ்வரி, தனலெட்சுமி ஆகியோர்கள் ஆவார்கள். மேற்கண்ட நபர்களில் ஜோதிராஜனும், அம்மாபொன்னுவும் இறந்து விட்டார்கள். அம்மாபொன்னு , பரமேஸ்வரி, தனலெட்சுமி ஆகியோர்களை இந்த வழககில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்று கேட்டால் சேர்க்கவில்லை. அம்மாபொன்னு இறந்ததை காண்பிக்க கூடிய இறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் தாக்கல் செய்யவில்லை. அம்மாபொன்னுவிற்கு எத்தனை

வாரிசு என்று கேட்டால் 3 நபர்கள் அசோக், மைதிலி மற்றும் மற்றொரு மகன் பெயர் ஞாபகமில்லை. அம்மாபொன்னுவின் கணவர் உயிருடன் உள்ளாரா என்று கேட்டால் உயிருடன் இல்லை. 12,13 பிரதிவாதிகளான முருகன், துரைபாண்டியின் தகப்பனார் பெயர் என்ன என்று கேட்டால் சீனிக்காளை. சீனிக்காளைக்கு எத்தனை மகன்கள் என்று கேட்டால் 3 நபர்கள் முருகன், துரைபாண்டி மற்றும் முத்து. மேற்கண்ட 3 நபர்களில் முத்துவை வழக்கில் சேர்க்கவில்லை என்று சொன்னால் இந்த நபர்களுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. பாக வழக்கு தாக்கல் செய்யும் போது சொத்துக்கு கூட்டு உரிமை உள்ள அனைத்து நபர்களையும் சேர்க்கப்படவேண்டும் என்றும் நான் மேற்கண்ட நபர்களை சேர்க்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்தது அவசியமான தரப்பினரை சேர்க்காத தோஷத்திற்கு உள்ளாகியுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வீமத்தேவருக்கு திருமணம் ஆகிவிட்டதா என்று கேட்டால் திருமணம் ஆகாமல் இறந்து விட்டார். எனது தகப்பனார் பால்சாமி தேவர் எந்த வருடம் இறந்து போனார் என்று கேட்டால் 2002ல் இறந்தார். எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் என் கைவசம் உள்ளது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் தகப்பனாரின் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் என் கைவசம் உள்ளது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மையான வாரிசு விபரம் தெரியவரும் என்றும் அதனால் நான் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் என் கைவசம் வைத்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 12,13 பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதில் உரையை நான் படித்தேனா என்று கேட்டால் பார்த்தேன் அவர்கள் வழக்கிற்கு சம்மந்தம் இல்லாததால் நான் படித்து பார்க்கவில்லை. 12,13 பிரதிவாதிகள் வழககில் சம்மந்தம் இல்லை என்றால் ஏன் அவர்களை வழக்கில் சேர்த்துள்ளேன் என்று கேட்டால் தாவா சொத்தில் அவர்கள் உழவடை செய்து வருகிறார்கள் அதனால் சேர்த்தேன். தற்போது நீதிமன்றத்தில் சொல்லியுள்ள விபரத்தைதான் என்னுடைய

வழககுரையிலும் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

(12,13 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு நாளைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)